**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை**
**MC NO. 02/2023**

முகமது கனி,
த/பெ.சேக் முகமது,
எல்.என்.புரம்,
அறந்தாங்கி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். .....மனுதாரர்கள்

//எதிராக//

முகமது ஷாஜகான்,
த/பெ. முகம்மது
எல்.என்.புரம்,
அறந்தாங்கி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ........எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.T.பன்னீர்செல்வம், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. பழனிநாதன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இம்மனு சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரரால் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 125-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1.1) மனுதாரர் தரப்பு மனுவில், மனுதாரருக்கு 3 மகன்கள் என்றும், மனுதாரரின் மூத்த மகன் முகமது ஜியாவுதீன் திருமணம் ஆகி அவரது

குடும்பத்துடன் தஞ்சாவூர் மாவட்டம், ஆவணத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், 2–வது மகன் முகமது நிஷாரூதீன் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறார் என்றும், 3–வது மகன் முகமது ஷாஜகான் M.Com வரை மனுதாரர் படிக்க வைத்து தற்போது அறந்தாங்கியில் தாஜ் ஏர் டிராவல்ஸ் என்ற கம்பெனி வைத்து நல்ல நிலையில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மனைவி கடந்த 14 வருடங்களுக்கு முன் புற்று நோய் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றும், அதன் பின்னர் மனுதாரர் தான் தன் மகனை கை சமையல் செய்து உணவிட்டு பராமரித்து காப்பாற்றி வந்தார் என்றும், 3–ம் மகனான எதிர்மனுதாரர் மனுதாரரின் மனையிடத்தில் வீடு கட்டி வசிப்பதால் இளைய மகனான அவர் தான் மனுதாரரை பராமரிக்க வேண்டும் என்று மனுதாரரும் மற்ற மகன்களும் சொல்லியபோது அவரும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் வயது மூப்பின் காரணமாக அவரது அத்தியாவசிய தேவையான உணவு மற்றும் மருத்துவ செலவுக்கு கூட வழியில்லாமல் அதற்கான செலவு செய்ய இயலாமல் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகி வருகிறார்.

1.2) மனுதாரர் கடந்த 2001–ம் ஆண்டு மாடிப்படியில் இருந்து கீழே விழுந்ததில் இடுப்பு எலும்பு முறிந்து பின்னர் உடல் நல குறைவோடு எழுந்து நடக்க இயலாமல் இருந்து வருகிறார் என்றும், மனுதாரருக்கு இரத்த கொதிப்பு இருப்பதால் மயக்கம், வாந்தி முதலியவற்றால் தொடர்ந்து துன்புற்று வருகிறார் என்றும், இரண்டு கண்களும் ஆப்ரேசன் செய்து பார்வை தெளிவு இல்லாமல் இருந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மருத்துவ செலவுக்கு எதிர்மனுதாரர் எந்தவிதமான பண உதவியும் செய்யாமல் இருந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தாஜ் ஏர் டிராவல்ஸ் கம்பெனி மற்றும் Browsing Centre வைத்து நடத்தி மாதம் ரூ.2,00,000/–த்திற்கும் மேல் சம்பாதித்து வருகிறார் என்றும், எனவே எதிர்மனுதாரர் தன் தந்தையான மனுதாரரை பராமரிக்க வேண்டியதும், அவருக்கு வேண்டிய மாதாந்திர ஜீவனாம்சத்தையும் உணவு, உடை, உறையுள் மருத்துவ பராமரிப்பு முதலியவற்றை செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும்,

எனவே, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதந்தோறும் உணவு, உடை, உறையுள் மருத்துவ பராமரிப்பு முதலியவற்றுக்கு மாதம் ரூ.25,000/– ஜீவனாம்சமாக செலுத்த உத்தரவிடவேண்டி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

2.1) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளான எதிர்மனுதாரரை M.Com வரை மனுதாரர் படிக்க வைத்து தற்போது அறந்தாங்கியில் தாஜ் ஏர் டிராவல்ஸ் என்ற கம்பெனி வைத்து நல்ல நிலையில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மனைவி கடந்த 14 வருடங்களுக்கு முன் புற்று நோய் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றும், அதன் பின்னர் மனுதாரர் தான் தன் மகனை கை சமையல் செய்து உணவிட்டு பராமரித்து காப்பாற்றி வந்தார் என்றும், 3–ம் மகனான எதிர்மனுதாரர் மனுதாரரின் மனையிடத்தில் வீடு கட்டி வசிப்பதால் இளைய மகனான அவர் தான் மனுதாரரை பராமரிக்க வேண்டும் என்று மனுதாரரும் மற்ற மகன்களும் சொல்லியபோது அவரும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் வயது மூப்பின் காரணமாக அவரது அத்தியாவசிய தேவையான உணவு மற்றும் மருத்துவ செலவுக்கு கூட வழியில்லாமல் அதற்கான செலவு செய்ய இயலாமல் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகி வருகிறார்.

2.2) மனுதாரர் கடந்த 2001–ம் ஆண்டு மாடிப்படியில் இருந்து கீழே விழுந்ததில் இடுப்பு எலும்பு முறிந்து பின்னர் உடல் நல குறைவோடு எழுந்து நடக்க இயலாமல் இருந்து வருகிறார் என்றும், மனுதாரருக்கு இரத்த கொதிப்பு இருப்பதால் மயக்கம், வாந்தி முதலியவற்றால் தொடர்ந்து துன்புற்று வருகிறார் என்றும், இரண்டு கண்களும் ஆப்ரேசன் செய்து பார்வை தெளிவு இல்லாமல் இருந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மருத்துவ செலவுக்கு எதிர்மனுதாரர் எந்தவிதமான பண உதவியும் செய்யாமல் இருந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் சிறுவயதாக இருக்கும்போது, எதிர்மனுதாரருக்கு

மூச்சுத்திணறலால் சிரமப்படும்போது மனுதாரர் எதிர்மனுதாரரை அழைத்து சென்று மதுரையில் உள்ள Shree Cheset and ENT Clinic தனியார் மருத்துவமனையில் 5 வருடகாலமாக மருத்துவ சிகிச்சை கொடுத்து மனுதாரர் பராமரித்து வந்தார் என்றும் கூறும் சங்கதிகள் முற்றிலும் சுத்த பொய்யான சங்கதிகள் என்றும் எடுத்துரைத்தார்.

2.3) மேலும், எதிர்மனுதாரர் வெளியில் வேலை செய்து அந்த சம்பாத்தியத்தின் மூலம் M.Com படித்தார் என்றும், அதற்கு எந்த செலவுகளும் மனுதாரர் செய்யவில்லை என்றும், முதலாம் ஆண்டு பாலிடெக்னிக் கல்லூரியில் படிக்கும் போது எதிர்மனுதாரருக்கு கிடைத்த கல்வி உரவி தொகையையும் மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்றும், 2 மற்றும் 3 வது ஆண்டிற்கான கல்வி கட்டணத்தை எதிர்மனுதாரரே பகுதி நேர வேலையில் சேர்ந்து கட்டிவந்தார் என்றும், எதிர்மனுதாரர் சென்னை, ஈரோடு ஆகிய ஊர்களில் தனியார் ஏஜென்ஸியில் 2007 முதல் 2012-ம் ஆண்டு வரை வேலை பார்த்தபோது அவரது செலவுக்கு போக மீதியை மனுதாருக்கு அனுப்பிவிடுவார் என்றும், மாவட்ட தொழில் மையத்தின் உதவியுடன் அவர் கடன் பெற்று e Service "இ சேவை மையம்" நடத்தி வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் கட்டியுள்ள வீடு அரசு புறம்போக்கு நிலம் என்றும், அதற்கு B மெமோ இரசீது பெற்று குடியிருந்து வருகிறார் என்றும், ரெத்தினக்கோட்டை கிராம கணக்குகளில் எதிர்மனுதாரர் பெயரே பதிவாகியுள்ளது என்றும், அந்த வீட்டிற்குரிய வீட்டுவரி இரசீது, குடிநீர்வரி, மின்கட்டணம் ஆகியவை இந்த எதிர்மனுதாரர் பெயரிலேயே உள்ளது என்றும், எதிர்மனுதாரர் நடத்தி வரும் இ சேவை மற்றும் ஏர் டிராவல்ஸ் மூலம் எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.15,000/- முதல் ரூ.20,000- வரை மட்டுமே வருமானம் வருகிறது என்றும், மனுதாரருக்கு அவர் நடத்தி வரும் மளிகை கடை மூலம் மாதம் ரூ.25,000/- முதல் ரூ.30,000/- வரை வருமானம் வருகிறது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 ஆவணங்கள் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அந்த ஆவணங்களின் நகல்களை

மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய முடியாது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

**3. இம்மனுவில் தீர்வு காண வேண்டிய வினா யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

**4. மனுதாரர் தரப்பு மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:**

4.1) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரான எ.ம.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ம.சா.ஆ.12 கடந்த 04.02.2026–ம் தேதி குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் எ.ம.சா.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.மனுதாரர் தரப்பு மற்றும் எதிரி தரப்பு வாதம்:**

5.1) மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், மனுதாரர் தனது தரப்பு வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபித்துள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் தந்தை மகன் உறவு முறை என்றும், மனுதாரர் அவருடைய மகனான எதிர்மனுதாரரை கஷ்டப்பட்டு படிக்கவைத்து ஒரு நல்ல நிலைமைக்கு ஆளாக்கி திருமணம் செய்து கொடுத்து, மனுதாரர் தான் வைத்திருந்த வீட்டை எதிர்மனுதாரருக்கு கொடுத்து, எதிர்மனுதாரரை நன்கு கவனித்து வந்ததாகவும், தற்சமயம் மனுதாரர் தன்னை தானே பராமரித்துக் கொள்ள முடியாமலும், மருத்துவ செலவினங்களை செய்வதற்கும், அன்றாட செலவினங்களுக்கும் சிரமப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார். எதிர்மனுதாரர் மனுதாரர் கவனித்துக்கொள்ள தகுந்த வசதி நிலையில் இருப்பதாகவும், எதிர்மனுதாரர் கான்கீரேட் வீடு, கார், இசேவை மையம் ஆகியவற்றின் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருவதாகவும்,

மனுதாரருக்கு எதிர்மனுதாரரை தவிர மற்ற மகன்கள் இருந்தாலும், எதிர்மனுதாரரே நன்றாக சம்பாதித்து வருவதாகவும், அதனால் எதிர்மனுதாரரிடம் மனுதாரர் ஜீவனாம்சம் கேட்க கடமைப்பட்டவர் என்றும் எடுத்துரைத்தார்.

5.2) எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், எதிர்மனுதாரர் தனது வாழ்வினை நடத்தி வர மிகுந்த சிரமப்பட்டு வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் கடன் பெற்று தான் இ சேவை மையம் நடத்தி வருவதாகவும், புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் தனது குழந்தைகளை பள்ளிகளில் படிக்க வைத்து வாழ்வில் முன்னேற தொடர்ச்சியாக கஷ்டப்பட்டு வருவதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரரின் 2 சகோதர்களாக கூறப்படும் நபர்களிடம் அவர்கள் வசதியான நிலையில் இருந்தும் ஜீவனாம்சம் கேட்கவில்லை என்றும், ஒரு நபர் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாகவும், மற்றொரு நபர் சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டி வருவதாகவும், மனுதாரர் தனியாக ஒரு வீட்டினை வைத்து வருவதாகவும், அவர் பெட்டிகடை நடத்தி வருவதன் மூலம் மாத வருமானம் வருவதாகவும், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் பெற பொய்யான சங்கதிகள் எடுத்துரைக்கப்படுவதாகவும், எனவே மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>**6.சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் பகுப்பாய்வு:**</u>

6.1) இவ்வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் மாதாந்திர ஜீவனாம்சமாக ரூ.25,000/– கோரியுள்ளது இந்நீதிமன்றத்தால், ஏற்கத்தக்கதா இல்லையா என்பது இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

6.2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டும், ம.சா.ஆ.2 ஆக எதிர்மனுதாரர் தாஜ் ஏர் டிராவல்ஸ் நடத்தி வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 ஆக எதிர்மனுதாரரின் பள்ளி கல்வி சான்றிதழ் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆகியவை எதிர்மனுதாரரின் பள்ளி, கல்லூரி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். ம.சா.ஆ.6 எதிர்மனுதாரர் வசித்து வரும் தார்சு வீட்டின் புகைப்படமும், ம.சா.ஆ.7 ஆக எதிர்மனுதாரர் நடத்தி வருவதாக கூறப்படும் இசேவை மையத்தின் புகைப்படமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 ஆக எதிர்மனுதாரரின் திருமண அழைப்பிதழும், ம.சா.ஆ.9 ஆக மனுதாரர் சிகிச்சை பெற்று வரும் மருத்துவ சிகிச்சை ஆவணங்களும், ம.சா.ஆ.10 ஆக மனுதாரரை எதிர்மனுதாரர் புறக்கணித்து வந்து அவர் காவல் துறையில் புகார் அளித்ததற்கான CSR நகல் மற்றும் கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.11 ஆக மனுதாரர் மனைவியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழ் குறித்து எவ்வித பூசலும் இல்லை. எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ம.சா.ஆ.12 ஆக எதிர்மனுதாரர் கல்வி பயின்றதற்கான கல்வி கட்டண இரசீது அசல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.3) அதேபோல், எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரின் பள்ளி மற்றும் கல்லூரி கல்வி சான்றிதழ்கள் எ.ம.சா.1 முதல் 3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.4 ஆக மனுதாரரின் தாயார் பெயரில் இருந்த வீட்டினை எதிர்மனுதாரர் அவர் பெயருக்கு மாற்றி கொடுத்தது, குடியிருந்து வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல், எ.ம.சா.5 மற்றும் 6 ஆவணங்கள் எதிர்மனுதாரர் வாழ்ந்து வரும் வீட்டிற்கு எதிர்மனுதாரர் பெயரில் அறந்தாங்கி நகராட்சியால் வழங்கப்பட்ட வீட்டு வரி மற்றும் குடிநீர் வரி இரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.7 மேற்படி வீட்டின் மின்சாரவரி இரசீது ஆகும்.

6.4) மனுதாரரான ம.சா.1 ஐ எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, குறுக்கு விசாரணை பாரா 1-ல், 3 ஆண் குழந்தைகள் உள்ளதையும், ஒருவர் சவுதி அரேபியாவில் வேலைப்பார்த்துவிட்டு உடல்நிலை சரியில்லாமல் இந்தியா வந்ததாகவும், மற்றொருவர் ஆட்டோ ஓட்டி வருவதாவும்

தெரிவித்துள்ளார். உபய தரப்பிலும் மனுதாரருக்கு 3 மகன்கள் உள்ளனர் என்பதும், 3 மகன்களில் எதிர்மனுதாரரும் ஒருவர் என்பதில் எவ்வித பூசலும் இல்லை. எதிர்மனுதாரர் இ சேவை மையம் நடத்தி வருவதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் வசித்து வரும் வீடானது எதிர்மனுதாரருக்கு சொந்தம் இல்லை என்றும், புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர் மாவட்ட சுயதொழில் ஆட்சியரகத்தில் இ சேவை மையம் நடத்த கடன் பெற்றுள்ளது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

6.5) எதிர்மனுதாரரான எ.ம.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, மேற்படி குறுக்கு விசாரணையில், ***மூத்த சகோதரர் முகமது ஜீயாவூதின் என்றால் சரிதான். அவர் மாதம் இரண்டு லட்சம் வருமானம் ஈட்டி வருவதாக கூறப்படுவதற்கு எவ்விதமான ஆவணங்களும் இல்லை என்றால், சரிதான். மற்றொரு சகோதரர் முகமது நிசாரூதின் ஆட்டோ டிரைவராக இருந்து வருகிறார் என்றால், சரிதான். அவரும் மாத வருமானம் முப்பது ஆயிரம் சம்பாதிப்பதாக கூறுவதற்கு ஆவணங்கள் ஏதும் சமர்பிக்கவில்லை என்றால், சரிதான். எனது சகோதரர் ஆட்டோவை வாடகைக்கு எடுத்து தான் ஓட்டினார் என்றால், இல்லை அவர் பெயரில் தான் ஓட்டினார்*** என்று சாட்சியமளித்துள்ளார்.

6.6) மேற்படி எதிர்மனுதாரரின் சகோதரர்கள் எவ்வளவு சம்பாதித்து வருகிறார்கள் என்பதை எதிர்மனுதாரரால் கணிக்க இயலாது என்பதை யாவரும் அறிந்ததே. அதேபோல், எதிர்மனுதாரர் இ சேவை மையம் மூலம் எவ்வளவு வருமானம் ஈட்டி வருகிறார் என்று கூறப்படும் சங்கதியை நிரூபிக்க வேண்டியது உபய தரப்பிலும் யார் ஒருவர் வருமானம் ஈட்டி வருவதாக கூறப்படும் சங்கதியை நிரூபிக்க வேண்டியது அவசியமானதாகும். எதிர்மனுதாரர் இ சேவை மையம் நடத்தி வருவது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதும், எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று தனது கல்வியை கவனித்து வந்ததாகவும், சில நேரங்களில் மனுதாரர் செலவு செய்ததாகவும், எதிர்மனுதாரரின் சகோதரர் குவைத்–ல் இருந்து வருவதாகவும், மற்றொரு சகோதரர் ஆட்டோ ஓட்டி வருவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரரின்

இரு சகோதரர்களை இவ்வழக்கில் சேர்க்கபடாத காரணத்தினால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதை இந்நீதிமன்றம் நிராகரிக்கிறது. ஒரு உரிமையியல் வழக்கை போல் இவ்வழக்கிலும், எதிர்மனுதாரரின் சகோதரர்களை ஒரு ஜீவனாம்ச வழக்கிலும் ஒரு அவசியமான மற்றும் தேவையான தரப்பினர் என்று எடுத்துரைக்க முடியாது.

6.7) எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது, பாரா 6-ல் ***நான் வீடு கட்டி இருக்கும் இடம் எனது தகப்பனார் பேரில் பீ மெமோ ஏற்பட்டு அவர் பெயரில் இருந்த இடம் என்று சொன்னால், சரியல்ல. என் பெயரில் தான் பீ மெமோ இருந்து வருகிறது. மேற்படி இடம் புறம்போக்கு இடம் என்று சொன்னால், சரிதான். எனக்கு பீ மெமோ ஏற்படுவதற்கு முன்பாக அந்த இடம் யார் பெயரில் பீ மெமோ ஏற்பட்டிருந்து என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படுள்ள ஆவணங்களில் நான் வீடு கட்டி இருக்கும் இடம் முன்பு மனுதாரரான எனது தகப்பனாரின் பெயரில் பீ மெமோ ஏற்பட்டிருப்பது என்பதை காண்பிக்க கூடியது என்றால், தவறு. அது எனது தாயார் பெயரில் இருந்தது. நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரரான எனது தகப்பனாரின் பேரில் இருந்த இடத்தினை அவர் என் பெயருக்கு மாற்றி தந்தார் என்று சொன்னால், ஆமாம் எனது தாயார் பெயரில் இருந்தது எனது பெயருக்கு மாற்றி தந்தார்*** என்று சாட்சியமளித்துள்ளார்.

6.8) மனுதாரரின் மனைவி இறந்த பின்பு, மனுதாரர் 2007-ம் ஆண்டு முதல் தனியாக இருந்து ஜீவனாம்சம் செய்து வருவதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எ.ம.சா.1-ன் குறுக்கு விசாரணை பாரா 8 முதல் 10-ல், எதிர்மனுதாரர் காரை கடனாக வாங்கி வைத்துள்ளதாகவும், இருசக்கர வாகனம் வைத்து வருவதாகவும், பாரா 9-ல், ***<u>எனது தகப்பனாருக்கு வேறுவித வருமானமோ, சொத்துக்களோ இல்லை என்று சொன்னால், சரிதான்.</u> எனது தகப்பனாருக்கு எவ்வித வருமானமும் இல்லை எனவும், <u>அவரது பிள்ளைகளான எங்களை நம்பி தான் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால், சரிதான்.</u> எனது சகோதரர்கள் நல்ல நிலைமையில் இல்லை, நான் தான் நல்ல நிலைமையில் இருக்கிறேன் அதனால் தான் அவர் என்னிடம் ஜீவனாம்சம் கேட்கிறார் என்று சொன்னால், சரியல்ல. <u>எனது தகப்பனாருக்கு இடுப்பில் அடிபட்டு வைத்தியம் பார்த்து</u>***

***வருகிறார் என்று சொன்னால், சரிதான்*** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் பாரா 10–ல் ***எனது தகப்பனாருக்கு ஏற்படும் மருத்துவ செலவு மற்றும் உணவு மற்றும் இதர செலவினங்களுக்கும் சேர்த்து தான் ஜீவனாம்சம் கேட்டு இருக்கிறார் என்றால், சரிதான். எனது தகப்பனாருக்கு நான் ஜீவனாம்சம் அளிக்க வேண்டும் என்று சொன்னால், சரிதான்*** என்று சாட்சியமளித்துள்ளார்.

6.9) மேற்கண்ட சூழ்நிலையில் ஒரு மகன் தனது தந்தையை பராமரித்து பார்த்துக்கொள்ள வேண்டியது சட்டப்படியான கடமை மட்டுமின்றி, தார்மீக அடிப்படையிலே முக்கியமான கடமையாக எக்காலத்திலும் கருதப்படுகிறது. மனுதாரருக்கு மற்ற இரு மகன்கள் உள்ளதால் இந்த எதிர்மனுதாரரான ஒரு மகனிடம் மட்டும் ஜீவனாம்சம் கோரியுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்யமுடியாது. ஏனெனில் எதிர்மனுதாரரும் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியது அவசியம் என்பது அவராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வருவதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தற்சமயம் மனுதாரரை பார்த்துக்கொள்ள ஆட்கள் இல்லாததாலும், எதிர்மனுதாரர் மனுதாரரை கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.

எனவே, இந்நீதிமன்றம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் உணவு, உடை, மருத்துவ செலவுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/– (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) ஒவ்வொரு மாதமும் ஆங்கில தேதி 5–ம் தேதிக்குள் வங்கி கணக்கு மூலமோ, இணையதள பரிவர்த்தனை மூலமோ, அல்லது மணியார்டர் மூலமோ அல்லது நேரிலோ செலுத்தவேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-</u>**

| | | |
|---|---|---|
| **ம.சா.1** | : | முகமது கனி |

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| **ம.சா.ஆ.1** | : | மனுதாரரின் ஆதார் அட்டை |
| **ம.சா.ஆ.2** | : | எதிர்மனுதாரர் நடத்தி வரும் நிறுவனத்தின் விசிட்டிங் கார்டு |
| **ம.சா.ஆ.3** | : | எதிர்மனுதாரரின் 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் |
| **ம.சா.ஆ.4** | : | எதிர்மனுதாரரின் கல்லூரி மாற்றுச்சான்றிதழ் |
| **ம.சா.ஆ.5** | : | எதிர்மனுதாரர் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பயின்றதற்கான புரோவிஸ்னல் சான்றிதழ் |
| **ம.சா.ஆ.6** | : | எதிர்மனுதாரரின் வீட்டின் புகைப்படம் |
| **ம.சா.ஆ.7** | : | எதிர்மனுதாரர் அலுவலகத்தின் புகைப்படம் |
| **ம.சா.ஆ.8** | : | எதிர்மனுதாரரின் திருமண பத்திரிக்கை |
| **ம.சா.ஆ.9** | : | மனுதாரர் மூலம் எதிர்மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணம் |
| **ம.சா.ஆ.10** | : | புகாரின் CSR மற்றும் அலுவலக நகல் |
| **ம.சா.ஆ.11** | : | மனுதாரரின் மனைவிக்கான வாரிசு சான்றிதழ் |
| **ம.சா.ஆ.12** | : | கல்விக்கட்டண இரசீது |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-</u>**

| | | |
|---|---|---|
| **எ.ம.சா.1** | : | முகமது ஷாஜகான் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| **எ.ம.சா.ஆ.1** | : | 10-ம் வகுப்பு சான்று |
| **எ.ம.சா.ஆ.2** | : | அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் படித்ததற்கான சான்று |
| **எ.ம.சா.ஆ 3** | : | எதிர்மனுதாரர் படித்த M.Com., சான்று அசல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| **எ.ம.சா.ஆ 4** | : | வீட்டின் பி மெமோ(கிஸ்து ரசீது) எண்ணிக்கை-2 |
| **எ.ம.சா.ஆ 5** | : | வீட்டு வரி ரசீது நகல் எண்ணிக்கை-2 |
| **எ.ம.சா.ஆ 6** | : | வீட்டின் குடிநீர் இணைப்புக்குரிய இரசீதுகள் |

| | | |
|---|---|---|
| | | நகல்(எண்ணிக்கை–2) |
| **எ.ம.சா.ஆ 7** | **:** | வீட்டிற்குரிய மின் கட்டண இரசீது நகல் எண்ணிக்கை–2 |

**<u>சான்று பொருள்கள் :</u>** இல்லை

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 04:55:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**